Reg. M. 2330. "SIDDHANTHAM." Vol. 17. No.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணியை உள்நாடு

| மலர் 17 | தாரண௵ சித்திரைமீ 1944௵ ஏப்ரல்மீ | இதழ் 4 |
|---|---|---|

பத்திராசிரியர் :
திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார், பி. ஏ., பி. எல்.
சைவ சித்தாந்த மகா சமாஜம்
51, தென்கூர் செல்வ விநாயகர் கோயில் தெரு,
மயிலாப்பூர், சென்னை

ஆண்டுச் சந்தா ரூபா 2 தனிப்பிரதி அணா 3

## பனந்தாட் செல்வர் பரன்தாட் சேறல்

[பத்திராசிரியர்]

திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடாலயத்துத் தலைமையிலமர்ந்து தமிழன்பர்கள் போற்றும் பல பரிசுகளை நிறுவி வழங்கிய ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் சிவபெருமான் திருவடிநீழற் கலந்து பரிபூரணம் எய்திய செய்தியைத் தமிழ்நாடு மிகுந்த ...க்கத்துடன் ஏற்றதை அனைவரும் அறிவர். திருவாச... ...யில் அச்சு வாகனம் ஏற்றியவரும், சென்னை ...யில் தமிழாசிரியரா யிருந்தவரும், பல நூல் ... கொட்டையூர் ஸ்ரீ சிவக்கொழுந்து தேசி... ...ல் (6-7-1893) விஜய௵ ஆனிமீ உசஉ

உதித்து, இம்மடாலயத்துப் பதினெட்டாம் பட்டத்திலமர்ந்து விளங்கிய ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சொக்கலிங்கத் தம்பிரான் சுவாமிகளிடத்து இளமையிலேயே தமிழ்ப் பாடமும் சாத்திரப் பாடமும் கேட்டு, 1920ஆம் துறவு பூண்டு, 1922ஆம் சின்னபட்டத்திலமர்ந்து திருமடத்தின் நிர்வாகத்தை மிகச் செம்மையாக நடத்தி 23-2-1930-ல் பத்தொன்பதாவது பட்டமாகத் திருமடத்தின் தலைமையை ஏற்றுக்கொண்ட ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் திருமடத்தின் தொண்டுகளை மிகச் செம்மையாக நடத்துவதோடமையாது பற்பல பரிசுகளைத் தமிழ் வளர்ச்சிக்கும் சைவ வளர்ச்சிக்கும் ஏற்படுத்தித் தனிப்பெருஞ் சிறப்பெய்தினார்கள். சென்னைப் பல்கலைக் கழகத்துத் தமிழ் வித்வான் பரீக்ஷையில் முதலாவதாகத் தேறுபவர்க்கு ஆயிரம் ரூபா பரிசு இந்தியா தேசத்திற்கே பெருமை தருவது. இத்தொகை வேறு எந்த இந்தியப் பல்கலைக் கழகத்திலும் எம்மொழிக்கும் எப்பொருட்கும் அளிக்கப்படுவதில்லை. ஸ்ரீ ராஜராஜ அபயகுலசேகர சோழன் ஞாபகார்த்தப் பரிசு, சேக்கிழார் பரிசு, நம்பியாண்டார் நம்பிகள் பரிசு, மெய்கண்டார் அருணந்தி சிவாசாரியார் பரிசு, மாணிக்கவாசகர் பரிசு முதலிய பலவற்றை ஏற்படுத்தி ஒவ்வொன்றுக்கும் மூலதனம் வைத்துப் புகழ் பெற்றார்கள். மிக எளிய வாழ்க்கை, புலவர்களோடு மிக அரிய சம்பாஷணை, மிக உயரிய தமிழன்பு, மிகப்பெரிய கொடைத்திறன் முதலியன ஸ்ரீலஸ்ரீ சுவாமிகளுடைய புகழுடம்பின் உறுப்புக்களாகும். இவ்வாறு பல வழிகளிலும் புகழும் புண்ணியமும் ஒருங்கே நிரம்பப்பெற்ற ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் 26-3-1944 ஞாயிற்றுக்கிழமை காலையில் பரிபூர்ணம் அடைந்தார்கள். அதற்கு முன்பு தமது உடல் நலம் குறைந்து வருவதை யுணர்ந்து தருமையாதீனத் திருக்கூட்டத் தம்பிரான்களுள் ஒருவராகிய ஸ்ரீலஸ்ரீ அருணந்தித் தம்பிரான் சுவாமிகட்கு 4-3-1944 ஒரு உயில் சாசனத்தின் மூலம் திருமடத்தின் தலைமையை ஒப்புவித்தார்கள்.

பரிபூர்ணமெய்திய ஸ்ரீலஸ்ரீ சுவாமிகளது பத்தாவது நாள் சடங்குகள் சென்ற 4-4-44 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றன. காலையில் சமாதி பூஜை முதலியனவும் நண்பகலில் மாகேசுவர

பூஜையும் மிக விமரிசையாக நடந்தேறிய பின்னர் மாலையில் 20-வது பட்டத்தில் அமர்ந்துள்ள ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடந்தது. பரிபூர்ணம் எய்திய சுவாமிகளின் பிரிவாற்றாமையைக் குறித்து இரங்கற் பாக்களும் பட்டம் எய்திய சுவாமிகளைப் போற்றி வாழ்த்துப் பாக்களும் வழங்கப் பெற்றன. நமது சமாஜத்தின் சார்பாக மயிலைகிழார் இளமுருகனார் 18-வது பட்டத்தில் அமர்ந்திருந்த சுவாமிகளுடைய காலத்திலிருந்தே இத்திருமடத்திற்கும் நமது சமாஜத்திற்கும் இருந்த நெருங்கிய தொடர்பை நன்கு விளக்கிச் சென்ற காலத்தின் பழநிலாத்திறம் இனி எதிர்காலத்தின் சிறப்பாகப் பரிமளிக்கும் என்ற நம்பிக்கையை வற்புறுத்தி இப்போது பட்டமெய்திய சுவாமிகள் கல்வி அறிவு ஒழுக்கம் முதலிய எல்லா குணநலன்களும் அமையப்பெற்றவர்களாதலின் இத்திருமடத்து ஸ்தாபகராகிய ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளுடைய திருத்தொண்டு தமிழ் நாட்டையுங் கடந்து ஒளி வீசியது போலவே இவர்களுடைய காலத்தில் திருமடாலயத்தின் தொண்டுகளெல்லாம் சைவத்திற்கும் தமிழிற்கும் நமது தமிழ் நாட்டிலும் பிற நாடுகளிலும் சிறந்த ஆக்கம் தேடி அவைகள் விளக்கம் உறும் என்று நம்புவதாகக்கூறி, பணந்தாள் பரமனுகிய செஞ்சடையப்பரை வழுத்தினர். ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் அனைவர்க்கும் ஆசீர்வாதம் கூறினர்.

ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் தருமையாதீனத் திருக்கூட்டத்துத் தம்பிரான்களில் ஒருவராயிருந்த காலத்தில் மயிலத்திலும் சீர்காழியிலும் நடந்த நமது சமாஜ விழாக்களில் விஜயம் செய்து சிறப்பித்தது நம் அனைவரும் அறிந்ததொன்று. தருமையாதீனத்தில் நடைபெற்ற மெய்கண்டான் சித்தாந்த மகா நாட்டிலும், கடந்த ஆவணி மாதம் நடைபெற்ற பத்தாவது ஆண்டுக் கொண்டாட்ட மகா நாட்டிலும் நமது சுவாமிகள் அன்பர்களனைவரையும் மிகச் சிறப்பாக உபசரித்து அவர்களோடு அளவளாவியது என்றும் மறக்கற்பாலதன்று. இவர்கள் காலத்தில் பொதுவாக சைவ உலகமும் சிறப்பாக நமது சமாஜமும் பல அரிய தொண்டுகளைப் புரிவதற்கு இத்திருமடாலயம் பேருதவி செய்ய முனைந்து நிற்கும் என்று நம்புகிறோம்.

## பிரிவாற்றுமை

சிறந்த தமிழ்ப் புலவரும், பழுதறப் பேசும் நாவலரும், சிலப்பதிகாரம் அகநானூறு முதலிய சங்கநூற்களுக்கு இக்காலத்திற்கேற்ற தெளிபொருள் விளக்கவுரை கண்டவரும் கரந்தைத் தமிழ்க் கல்லூரித் தலைவரும், நமது சமாஜத்து 28-வது ஆண்டு நிறைவு விழாவில் தலைமை தாங்கியவரும் ஆகிய சைவப் பெரியார் ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் 28-3-44-ல் சிவபதம் எய்திய செய்தியை மிக வருத்தத்தோடு தெரிவிக்கிறோம். 3-4-44-ல் நமது சமாஜ அநுகாபக் கூட்டம் ராவ்பகதூர் - C. M. இராமச்சந்திரஞ் செட்டியார் அவர்கள் தலைமையில் கூடிப் பிரிவாற்றுமைத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது.

# கண்டராதித்தபுரம்

[பு. ர. சுவாமிநாதன்]

நமது சமாஜத்தின் மார்ச்சு மாதக் கூட்டம் நடந்த இடம் கண்டாச்சிபுரம் என வழங்குகின்றது. இதில் சில கல்வெட்டுக்கள் இருக்கின்றன என்பதை அரசாங்க அறிக்கை மூலம் அறிந்த அன்பர் மயிலைகிழார் இவ்வூரின் பெயர் கண்டராதித்தபுரமாயிருக்கவேண்டும் என்று நண்பர் பலரிடம் பிரயாணத்தின்போது கூறினர். பிறகு அவ்வூருக்குச்சென்றவுடன் அவ்வூர் திருக்கோயிலிலுள்ள கல்வெட்டுகளைச் சோதித்தபோது கண்டராதித்தபுரம் என்ற பெயர் கட்புலனாயிற்று. பிறகு ஒரு சொற்பொழிவினிடையே கண்டராதித்தர் என்பவர் முதல் பராந்தக சோழனுடைய இரண்டாவது புதல்வர் என்றும் அவர் சிறந்த சிவபக்தர் என்றும் 9-ம் திருமுறையுள் திருவிசைப்பா பதிகம் ஒன்று பாடியவர் என்றும் அவராலேனும் அல்லது பின் வந்த அரசர் ஒருவரால் இவர் பெயரை நினைவூட்டும் முறையிலேனும் இவ்வூருக்கு இப்பெயர் அமைக்கப் பெற்றிருக்க வேண்டுமென்றும் திரு. மயிலைகிழார் அவர்கள் விளக்கினார்கள். கல்

வெட்டுக்களின் ஆராய்ச்சியினுல் மறைந்த,மறந்த, பல பொருள்களை மீண்டும் கண்டுபிடிக்கலாம் என்பதற்கு இது ஒரு சான்ருகும். திருக் காரிகரையை கண்டுபிடித்ததும் மற்ெருரு சான்ருகும்.

---

## கோடை - சித்தாந்த வகுப்பு

கோடை வகுப்பைக் குறித்து முன் இதழில் அறிவிப்பு வந்தது. தேதியும் இடமும் மாற்றப்பட்டிருக்கின்றன. மே மாதம் 14-ந் தேதி தென்காசிக்கடுத்த பாவநாசத்தில் இவ்வகுப்பு நடைபெறும். மனுக்கொடுத்த யாவரும் 14-ந்தேதியில் தொடக்கத்திற்கே வந்து விடவும். திருக்கோயில் வழிபாட்டின் பின்பு ராவ்பகதூர் C. M. இராமச்சந்திரஞ் செட்டியார் அவர்கள் அன்று மாலை 8 மணிக்கு (I. S. T.) வகுப்பைத் திறந்து வைப்பார்கள். திரு. வி. க. அவர்கள் தலைமை ஆசிரியராகவும், திரு. ந. சிவகுருநாத பிள்ளை அவர்கள், திரு. ம. பாலசுப்ரமணிய முதலியார் அவர்கள், வித்துவான் திரு. முத்து சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள், திரு. வஜ்ரவேல் முதலியார் அவர்களும் ஏனைய அறிஞர்களும் ஆசிரியர்களாகவும் வகுப்பை நடத்த இசைந்துள்ளார்கள். அம்பா சமுத்திரம் ரயில்வே ஸ்டேஷனில் இறங்க வேண்டும். அவ்வூரிலிருந்து பாவநாசம் சுமார் 5 மைல். வண்டி, பஸ் வசதிகள் உண்டு. ஒவ்வொருவரும் சிவஞானபாடியமும், சிற்றுரையும், குறிப்புத் தாள்களும் கொண்டு வரவும். பெண்களுக்குத் தனி வசதியுண்டு. வகுப்பில் சேர விரும்புவோர் மனுக்களை ஏப்ரல் 22-ந் தேதிக்குள் அனுப்பவும்.

---

## மாதக் கூட்டங்கள்

### சமாஜ ஏப்ரல் மாதக் கூட்டம்

ஏப்ரல் மாதம் 22, 23 தேதிகளில் ஞானியார் கழக ஆண்டு விழாவும் சமாஜ மாதக் கூட்டமும் செங்கற்பட்டில் திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் B. A., B. L., (பத்திராசிரியர், சித்தாந்தம், சென்னை) அவர்கள் தலைமையில் நடைபெறும்.

மே மாதக் கூட்டம் வாலாஜாபாத்திற்கு அருகிலுள்ள அங்கம் பாக்கத்தில 7-5-44-ல் உயர்திரு ராவ்பகதூர் C. M. இராமச்சந்திரஞ் செட்டியார் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

---

## கண்டராதித்தபுரம் நிகழ்ச்சிகள்

சமாஜ மார்ச் மாதக் கூட்டம் 24-3-44-ல் தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்களின் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. அவ்வூர் மாணவிகள் கடவுள் வணக்கம் செய்தனர். சைவமும் தமிழும், அன்பு, சங்ககாலப் புலவர்நிலை என்னும் விஷயங்களைப்பற்றி முறையே திருவாளர்கள் வை. ச. இராமலிங்க முதலியார், பு. ர. சுவாமிநாதன், கரந்தை வித்துவான் பழனி ஆகிய இவர்கள் பேசினர். தலைவர் முடிவுரையின்பின் சமாஜக் காரியதரிசியார் நன்றிகூற கூட்டம் இனிது முடிவுற்றது.

25-3-44, 26-3-44 ஆகிய நாட்களில் காலை மாலை இரு வேளைகளிலும் கூட்டம் நடைபெற்றது. அச்சமயம் திருவாளர்கள் ம. பாலசுப்பிரமணிய முதலியார், கந்த. நரசிம்மன் செட்டியார், கா. இராமநாதன் செட்டியார், சா. இராஜேசுவரி அம்மையார், அ. பா. இராமலிங்கம், சு. சண்முக முதலியார், புரிசை - சு. முருகேச முதலியார் முதலியோர் முறையே கடவுள் வழிபாட்டில் சில நுட்பங்கள், சற்குரு பக்தி, ஏன் பிறந்தார், திருவாசகம், பரதன் மாண்பு, தமிழறியும் பெருமாள், அருச்சுனன் தவம் என்பனபற்றிப் பேசினர். தலைவரது கருத்துரையுடன் கூட்டம் இனிது நிறைவேறியது.

---

## கிராமத் தொண்டு

மயிலை ஸ்ரீ இராமகிருஷ்ண தொண்டர் சங்கத்தின் ஆதரவிலும் நமது சமாஜத்தின் ஆதரவிலும் கிராமத் தொண்டு மே மாதம் 6, 7, 8 தேதிகளில் திருச்சி ஜில்லாவிலுள்ள எலந்தைக்கூடம் என்ற கிராமத்தில் நடைபெறும். இத்தொண்டில் கலந்துகொள்ள விரும்புவோர் ஏப்ரல் 22 ந் தேதிக்குள் காரியதரிசிக்குத் தெரிவிக்க

வேண்டியது. சென்னைப் பக்கத்திலிருந்தும், திருச்சி பக்கத்திலிருந்தும் வருகிறவர்கள் வெள்ளிக்கிழமை (5-5-44) இரவில் புறப்படும் திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸில் புறப்பட்டு, டால்மியாபுரம் ஸ்டேஷனில் இறங்கவேண்டும். அன்று அங்கிருந்து வண்டிவசதிகளை ஏற்படுத்துகிறோம். எலந்தைக்கூடம் திருமழபாடி என்னும் திருப்பதியிலிருந்து மூன்று மைல். கிராமப் பணியாற்ற விரும்புவோர் மூன்று நாட்கள் தங்குவதற்கு மூன்று ரூபாய் கட்டணம் செலுத்த வேண்டும்.

# மாடம்பாக்கம்

**[கோவைகிழார்]**

மாடம்பாக்கம் ஒரு சிவத்தலம். அது தாம்பரம் இருப்புப் பாதை நிலையத்திலிருந்து வடகிழக்கே மூன்று கல் அளவில் உள்ளது. போகும் வழியில் ஒரு சிறு குன்றைச் சுற்றிக்கொண்டு செல்ல வேண்டும். வழி சாதாரணமாக இருக்கிறது. மாட்டு வண்டியில் செல்லலாம், நடந்து செல்வதும் சுலபம். ஊர் சிறிய ஊர். நான்கு அகலமான தெருக்கள் ஆலயத்தைச் சுற்றி இருக்கின்றன. ஊருக்குத் தெற்கே ஓர் அழகிய இலுப்பைத் தோப்பு இருக்கிறது. ஒரு சிறு ஏரியும் அதன் கீழே அது பாயும் நன்செய் நிலங்களும் இருக்கின்றன. அவ்வேரிக்கு மேற்கே சேரி இருக்கின்றது. ஆகவே, ஊர் சம நிலப்பரப்பினதாகச் செழிப்புடனும் குளிர்ந்த நிழலுடனும் இருக்கிறது.

இவ்வூர்த் திருக்கோயில் ஊருக்கு நடுவில் அமைந்திருக்கிறது. அது ஒரு பண்டைக்கோயில். சோழர் பாண்டியர், விஜயநகரத்து அரசர்களுடைய கல்வெட்டுக்களைக் கொண்டது. குறைந்தது 1000 ஆண்டுகளுக்கு முற்பட்டது எனலாம். வெளிச்சுற்று அகலமாக இருக்கிறது. முன் கோபுரம் பெரிதாகக் கட்டும் நோக்கத்துடன் அடித்தளம் அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் ஒரு வாயிலுடன் கட்டடம் நின்றுவிட்டது. முன் மண்டபம் பெரியது. உயர்ந்த கற்கால்களால் கட்டப்பட்டுள்ளது. சிறந்த சித்திரப்

பதுமைகள் அத்தூண்களில் செதுக்கப்பட்டுள்ளன. உள் மண்டபமும் நல்ல கல் தூண்களால் தாங்கப்பட்டுள்ளது. கருப்பக்கிருகம் பின்புறம் அரைவட்ட வடிவு உள்ளது. அதில் பண்டைக்கல்வெட்டுக்கள் உண்டு. மேலே விமானம் யானைமுதுகு வடிவு கொண்டது. இதனைச் சிற்ப சாஸ்திரம் கஜப்ருஷ்டம் (Gajaprishta) என்று கூறும். திருமுறைகளில் "தூங்கானைமாடம்" எனப் பெறும் இவ்வித வடிவம் தொண்டை நாட்டுப் பழங்கோயில்களில் உண்டு. சுவாமி கோயில் கிழக்கு நோக்கு கொண்டது. அம்பிகை கோயில் தெற்கு நோக்கு உடையது. கோயிலுக்கு அடுத்துத் தெற்குத் திக்கில் ஓர் அழகிய திருக்குளம் இருக்கின்றது. இதற்கு வடபுறம் அழகிய கற்படிகள் கட்டப்பெற்றிருக்கின்றன. ஆலயத்தின் சில பகுதிகள் இன்னமும் செப்பம் இடவேண்டியிருக்கின்றன.

திருக்கோயிலில் எழுந்தருளி இருக்கும் மூர்த்தியின் பெயர் தேனுபுரீசர் என்று வடமொழியில் கூறுகிறார்கள். தேனு என்றால் பசு அல்லது மாடு என்று பொருள். அப்பெயர் ஊர்ப்பெயரிலிருந்து வருவிக்கப்பெற்றது ஆகும். கர்ப்பக்கிருகத்திற்கு அடுத்துத் தென்சுற்றில் உள்ள ஒரு தூணில் ஒரு பசு ஒரு சிவலிங்கத்திற்குப் பால் கறக்கும் பாவனையில் ஒரு உருவம் செதுக்கப்பட்டிருக்கிறது. இதுவே இத்திருக்கோயிலின் தோற்றத்திற்கும் சுவாமியின் பெயருக்கும் ஊரின் பெயருக்கும் காரணம் காட்டுகிறது என்பர். ஆனால் இத்திருக்கோயிலில் உள்ள கல்வெட்டுக்களில் சுவாமியின் பெயர் சிற்றேரியுடைய நாயனார் எனக் கண்டிருக்கிறது. அதனை அறிஞர் ஆராய்ந்து கொள்க. மேலும் சிவலிங்கத்தின் திருவுருவம் நோக்கத்தக்கது. முடியில் வடுப்பட்டதுபோல் இருக்கக் காணலாம்.

இக்கோயிலில் திருவாதிரைத் திருநாள் நன்றாக நடைபெறும். அப்போது சேரியில் உள்ள மக்கள் வழிபாடு செய்வது மதிக்கத்தக்கது. இங்கு எழுந்தருளியிருக்கும் முருகக்கடவுள்மீது அருணகிரிநாதர் ஒரு அழகிய திருப்புகழ் அருளிச் செய்துள்ளார். இத்தலத்தைச் சைவமக்கள் கண்டு அம்மையப்பர் அருள் பெறுவார்களாக.

# மதுரை மாநாட்டுப் பேருரைச் சுருக்கம்

*[பத்திராசிரியர்]*

(மலர் 17 ; இதழ் 3 ; 48-ம் பக்கத் தொடர்ச்சி)

இம்மதுரையிலே மூர்த்தி நாயனார் ஆண்டார். ப்ளேடோ என்ற கிரேக்க ஞானி அரசனால் உலகம் சீர்படும் எனப் பேசியுள்ளார். அந்த உட்கோளே மூர்த்தி நாயனார் வரலாற்றின் உட்கோளாகும். தூய்மைக்கு அறிகுறியாய் நிலையாமையை வற்புறுத்தி ஒற்றுமைக் காட்சியைத் தந்துதவும் திருநீறும், அன்பின் அறிகுறியாம் சிவமணியும், உண்மை அகத்துறவில் விளைந்த சிவத் தொண்டால் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளராம் பெருந்தன்மை சான்ற அந்தணர்ச் செல்வமுமே அரச கோலமாகக் கொண்டவர் மூர்த்தி நாயனார். இவர் அரசர் குடியிற் பிறவாமை ஒன்றே சாதிச் சழக்கை ஒழிக்கின்றது. இவருடைய மும்மைக் கொள்கை அரசியலின் உயிரியல்பை விளக்குகின்றது. இத்தகைய உயரிய உட்கோளை நன்கறிந்தவர் பாண்டிய மன்னர்கள். பழியஞ்சுவது பாண்டி நாட்டியல்பு. கோவலனைக் கொன்ற பழி தீரத் தன்னுயிரையே கொடுத்து விளைந்த கொடுங்கோலைச் செங்கோலாக்கியவன் நெடுஞ்செழியன். தீமை செய்தான்போலச் செங்கை குறைத்தான் பொற்கைப் பாண்டியன். பழியஞ்சின திருவிளையாடலும் பாண்டி நாட்டில் நிகழ்ந்ததே. பாண்டியர் சிறந்த உட்கோளை, பாண்டியர் வாயாற் கேட்கும்பெருமை நம் தமிழ் நாட்டிற்கே உண்டு. "நகுதக் கனரே......சினங்கெழு வேந்தரை, அருஞ்சமஞ் சிதையத் தாக்கி முரசமொடு, ஒருங்ககப்படேஎ னாயிற் பொருந்திய, என்னிழல் வாழ்நர் சென்னிழற் காணாது, கொடியன் எம்மிறையெனக் கண்ணீர் பரப்பிக் குடிபழி தூற்றுங்கோலேன் ஆகுக, ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி, மாங்குடி மருதன் தலைவனாக, உலகமொடு நிலை இயபலர் புகழ் சிறப்பிற், புலவர் பாடாது வரைக என் நிலவரை" (புறநானூறு 72) என்ற பாடலைப் பார்க்க.

புராணக் கதையென்றால் பலருக்கும் இந்நாளில் சிரிப்பும் வெறுப்பும் உண்டாகின்றன. கதையின் உட்கோளையே நாம் ஆராய்தல்வேண்டும். கதைகள் பலபல வழியாகப் பலபல தலைமுறையாக வழங்கி வந்தவை. வாய் வழியாக வந்தபோது வேண்டியவர் வேண்டியவாறெல்லாம் திரித்துக் கூறியிருப்பர். புறநிலையை ஆராய்தலாகாது. "முப்புரம் செற்றனன் என்பர்கள் மூடர்கள், முப்புரமாவது மும்மலகாரியம்" என்று திருமூலர் முன்னரே கூறியுள்ளார். பெரும் புரட்சியாளரான ஷெல்லி முதலிய பாவாணர் எல்லாம் மேனாட்டில் வழங்கும் கிரேக்கக் கதைகளின் உட்கருத்தை மட்டும் பாராட்டிப் பாடுதலைக் காண்க.

மதுரைமா நகரமே ஆண்டவன் அருளிய 64 திருவிளையாடல்களுக்கும் இடந்தந்தது. திருவிளையாடல் முதற்பகுதியில் வானவரோடு தொடர்பு கொள்கின்ற கதைகள் பல வருகின்றன. அருள் அம்மை இங்கு பிறக்க ஆண்டவன் தமிழுலகிலே அவளை மணந்து ஆண்ட இடம் மதுரையேயாம். அருளும் அறிவும் வேர்கொண்டு அனைத்து வகை உலகுமாய்ப் பரந்து நின்ற உண்மை இங்குப் புலனாகின்றது. தமிழ் மக்கள் உலகத்திற்கு வழிகாட்டிகள் என்பதே இதன் படிப்பினை. இவ்வாறு நாகரிகம் பிறந்த நம் நாடு இன்று பின்னணியில் பீடிழந்து கிடப்பது நமக்குப் பெருமையாகுமா? தமிழர்கள் தங்கள் கடமையைச் செய்யத் தவறிவிட்டார்கள் என்பதன்றோ இதனால் விளங்குகிறது. ஆண்டவன் அம்மையை மணந்ததும் இயற்றியருளிய திருவிளையாடல் குண்டோதரனுக்கு அன்னமிட்டது. பசியின் வடிவமே குண்டோதரன். பசிப்பிணி ஓட்டுதலே அரசர் முதற் கடமை. Freedom from want என்று ரூஸ்வெல்ட் பெருமகனார் முழங்கவில்லையா? உயிர்களை இறைவன் வீற்றிருக்கும் திருக்கோயில்களாகக் கொண்டு மாகேசுவரபூசை செய்வதினும் சிறந்த சிவத்தொண்டு எது?

எழுகடலழைத்தல், கடல்சுவற வேல்விடல், மேருவைச் செண்டாலடித்தல், கடலைவற்றச் செய்தல், நான்மாடக் கூடலாக்கல் முதலாகப் பின்வரும் திருவிளையாடல்களின் உட்கோள் என்னை? நீர்வளத்தைப் பெருக்கிப் பண்டையோர் நினைவை நிலைநாட்டிப்

புதுமையும் பழமையும் தொடர்பாய் விளங்க நாட்டை நன்கு காத்து இந்நாட்டின் இயற்கை எல்லைகளாம் இமயமலைக்கும் கடலுக்கும் இடையே உள்ள உலகை வென்று ஒற்றுமையை நிலைநாட்டி வானளாவ வாழ்ந்து கடல்கோளையும் தடுத்துச் சிறந்த கோட்டையாம் நான்மாடக் கூடலைக் கட்டி அரசாண்ட அரசியற் சிறப்பே அத்திருவிளையாடல்களின் அரிய கருத்தாகும். உடலை வளர்ப்பதோடு உயிரை வளர்க்கும் மெய்யுணர்வை ஊட்டவேண்டி ஆண்டவன் வேதத்திற்குப் பொருள் அருளிச் செய்வதோடு முத்தமிழ் நெறியையும் வளர்த்து உலகை வாழ்விக்கின்றான். வெள்ளி அம்பலக் கூத்தாடிக் கூத்துத் தமிழை வளர்க்கின்றான். இயற்றமிழ் வளர்க்கும் நிலையைப் பிற்பகுதியிற் காண்போம். இசையை வளர்ப்பதும் ஈசன் திருவுள்ளமாம். விறகு விற்றல், திருமுகம் கொடுத்தல், பலகை இடல், இசைவாது வெல்லல் முதலிய திருவிளையாடல்கள் இவ்வுண்மையை வற்புறுத்துகின்றன. தமிழிசை இல்லையானால் தமிழ் நாகரிகம் எங்கே? பாட்டை வளர்த்த பாண் பெரு மக்களைத் தீண்டாதவர்கள் எனத் தெருவில் ஓட்டிய நாளோடு தமிழர்களது கலைவாழ்வு தலைசாய்ந்தது.

இவ்வாறு இறைவன் வளர்க்கும் இயற்கை வாழ்விற்கெதிரே செயற்கை நாகரிகமும் பரவுகிறது. Robot (ரோபோ) என்று ஆங்கிலர் கூறும் யந்திரம் மனிதனைப்போலவே இயங்குகின்றது. Mechanical cows என்ற யந்திரப் பசுக்கள் பால் தருகின்றன. இத்தகைய செயற்கை வாழ்வு அன்பை உறிஞ்சி உலகை யழிக்கும் என்று இன்றைய பெரும்போர் இடித்துரைக்கின்றது. இதை யழிப்பதே அறம். மாயப்பசு, மாயயானை, மாயநாகம் முதலியவற்றை அழிப்பதே இறைவன் திருவிளையாடலாகின்றது. செயற்கை வாழ்வை வெல்லுவதே சைவமாம். செயற்கையாய் வாழ்வோரே இயற்கையை எதிர்ப்போர். இவர்களை அடக்க, இயற்கை உண்மைகளைத் தெள்ளத்தெளிய உணர்ந்து, இயற்கை யன்னையின் இன்பமடிமீது இளங்குழவிகள்போலத் தவழும் சித்தர்களுக்கே இயலும். இயற்கை வாழ்வு பெண்கள் இரத்தத்தில் ஊறி

யிருக்கிறது. ஆண்டவன் சித்தனாக வந்து அட்டமாசித்தியைப் பெண்களுக்கே உபதேசித்தான்.

பெண்களெல்லாம் விஞ்ஞானப் புலவராயிருந்தால் இப்பெரும் போர் தோன்றியே யிராது. செயற்கை வாழ்வில் யானை மக்களைக் கொல்ல வருகிறது. இயற்கை வாழ்வில் கல்லானையும் கரும்புண்டு களிக்கின்றது. இயற்கை வாழ்வையும் செயற்கை வாழ்வையும் சைவம் சமணம் என்ற இருவேறு மதங்கள்மேல் வைத்துக் கதை கூறி வருவது ஏனோ அறிகிலோம்.

ஆண்டவன் அருள் அரசர்க்கு மட்டும் பொங்கி வழிவதன்று. ஏழைப் பெண்களுக்கு ஆண்டவன் அருள்புரிவதை மாமனாக வந்து வழக்குரைத்தது, அங்கம் வெட்டினது, வன்னியும் கிணறும் இலிங்கமும் அழைத்தது முதலிய திருவிளையாடல்களிற் காணலாம். இவை பெண்களாகிய நமக்குப் பெரிதும் ஊக்கம் ஊட்டுவனவாம். இரசவாதம் செய்த திருவிளையாடல் உலகிற்கே ஒரு பெரிய நற் செய்தியை அறிவிக்கின்றது. உலக வாழ்க்கையின் நெருக்கடியில் பொது மகளாய்ப் பிறந்த ஒரு பெண், அன்பே உருவாய் ஆண்டவன் வெறிகொண்டு அழகு வழிபாட்டில் தலைப்பட்டு இறைவனைக் கண்டு களிக்கின்றாள்; போலிக் கோலத்தைக் கண்டு மயங்காமல் உண்மை அன்பினைக் கண்டே ஆண்டவன் உவந்து உவந்து அருள் செய்கின்றான். கிறிஸ்துநாதர் ஆட்கொண்டருளிய Mary Magdalene கதையும் இவ்வுண்மையை வற்புறுத்துகின்றது. சாதியும் சமயமும் மாண்டொழிய உண்மைக் கடவுளனுபவம் ஒளி விடுகின்ற இடம் ஈதேயாம்.

மக்கட் கூட்டத்தில் சிலர் தீய வழியிற் புகுவது சமுதாய வாழ்க்கையிலுள்ள சீர்கேட்டினாலாகும். கொள்ளை நோய் பரவிய இடத்தில் தூயராய் வாழ்வோரும் பீடிக்கப்படுகின்றனர். சிறைச் சாலைக்குப் பதிலாக மனோ மருத்துவசாலை வேண்டுமென்று இந் நாளில் வற்புறுத்தப் படுகின்றது. ஆண்டவன் படிப்படியாக உயரிய அனுபவங்களில் நம்மை அழுத்தித் தீமையை மறக்கச் செய்து நல்லவர்களாக்குகின்றான், மனமாற்றத்தை உண்டுபண்ணுகின்றான். "ஏதுபிழை செய்தாலும் ஏழையேனுக்கிரங்கித் தீதுபுரியாத"

தெய்வத்தின் "நீது தழைக்கின்ற" ஆறு அது. ஒரு பிறவியிலேயே இப்பெருமாற்றம் வரலாம். மாபாதகம் தீர்த்த திருவிளையாடலில் இப்பேருண்மைகள் விளங்குகின்றன.

மக்கள் மட்டுமா இறைவன் பிள்ளைகள்? இயற்கை வளர்ச்சி முறைப்படி பறவைகளும் விலங்குகளும் மூத்த பிள்ளைகளாம். நாரைக்கு முத்தி கொடுத்தது, கரிக்குருவிக்கு உபதேசித்தது, பன்றிக்குட்டிக் கருளியது முதலிய திருவிளையாடல்கள் இறைவனருள் உலகம் முழுவதும் பொங்கி வழிவதை உணர்த்துகின்றன. "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்று பாடும் தமிழர் உயிர்களனைத்தையும் ஒரு குலமாகவே கொண்டனர்.

இயற்றமிழை வளர்ப்பதும் இறைவன் பொறுப்பே என்பது திருவாலவாய்க் காண்டத்தின் உள்ளுறையாம். அநுமன் சீதையிடம் மதுரமொழி ஒன்றிற் பேசியதாக வால்மீகி கூறுகிருர். இம் மதுரமொழியே தமிழ். இம்மதுரம் வளர்ந்த நகரே **மதுரை.** குருவியும் விலங்கும் மக்களும் கடவுளும் பேரின்பமாகி ஒருங்கு திரண்ட இனிமை, அரச வாழ்வில் மக்கட்கூட்டம் பசிப்பிணி நீங்கி ஆடல் நெறி பாடல் நெறியில் வாழ்ந்து இயற்கையின் போக்கையெல்லாம் இறைவன் திருவிளையாடலாகக் காணும் இனிமை, அஞ்சா நெஞ்சின் அமைதி நிறைந்த இனிமை, அனைவர்க்குமாய்ப் பொங்கும் அருளமுதின் இனிமை, இவையே தமிழ். இத்தகைய தமிழுக்குத் தனிப்பெருங் கடவுளும் அடிமையாகிருர். உலகைத் தாங்கும் திருமாலின் கதை உடலை வளர்க்கும் கதை; சங்கப் பலகையைத் தாங்கும் சிவபெருமான் கதை அறிவை வளர்க்கும் கதையாகும். தமிழ் என்ருல் வெறும் பேச்சன்று, பேச்சின் உள்ளே விளங்கும் பெருங் கருத்தின் ஆழமே தமிழாகும். கருத்தென்ருல் காற்ருய் மறைவதன்று, வாழ்க்கையின் விளைவாய் வளர்ந்து திரண்ட மாபெருங் கடவுட் காட்சியே தமிழாம். இத்தகைய தமிழ் எங்கே? அன்றைய உயர்வு என்ன! இன்றைய தாழ்வு என்ன! அங்கயற்கண்ணியே அருளல் வேண்டும்.

சிறந்த பாடல்கள் கடவுள் வாக்கே என்ற நம்பிக்கை தொன்று தொட்டு மக்களிடையே பரவி வந்துள்ளது. பாட்டின் உண்

மைத் தன்மையை இது நன்கு விளக்குகின்றது. எங்குமாய் நிற்கும் உண்மை அறிவிலே பாவலன் தோய்ந்து பேரின்பமாய் மாறி வருகின்றபோது எழுகின்றனவே உண்மைப் பாடல்களாம். அங்கே ஊற்றெடுத்துப் பொங்குவதெல்லாம் கடவுட் களிப்பேயாம். இறையனார் அகப்பொருளும், "கொங்கு தேர் வாழ்க்கை" என்ற பாடலும், கடவுட் பாட்டெனப் பேர் பெறுவது வியப்பன்று. தருமிக்குப் பொற்கிழி யளித்த திருவிளையாடலின் உட்கோள் என்ன? எளியவனுக்கு நாட்டின் உடைமையைப் பங்கிட்டுக் கொடுத்த வரலாறே இது. வறுமையினின்றும் கலையுலகில் விடுதலை வாங்கித் தர ஆண்டவனே புறப்படுகின்றான். மணிவாசகப் பெருமானும் சௌந்தரசாமந்தனும் பாண்டி நாட்டுப் பணத்தை மக்களிடையே பங்கிட்டுக் கொடுத்து உடலையும் உயிரையும் வளர்த்தனர். நடமாடும் கோயில் படமாடும் கோயில் வழிபாடுகள் இவ்வாறு பல திருவிளையாடல்களால் வற்புறுத்தப் பெறுகின்றன.

முக்கண் காட்டினும் குற்றம் குற்றமே என்பது தமிழனுடைய தனிப் பெரும் வீறு. அறியாமை யாரை விட்டது? தெரியாது தொட்டாலும் தீ சுட்டே தீரும். நக்கீரனார் பின்னே ஆண்டவனருளால் காளத்தி அனுபவமும் கைலை அனுபவமும் பெறுகின்றார். இறையனார் அகப்பொருளுக்கு மெய்யுரை காண்கின்றார். இவைகளெல்லாம் பாட்டுலக உண்மைகள். மெய்யுரை விளக்க வந்தது மூங்கைப் பிள்ளை, விளக்கும் முறை கண்ணீர் வார்ந்து மெய்ம்மயிர் சிலிர்த்து நிற்றல். இதனால் விளங்குவதென்ன? உண்மைப் பாடலின் கருத்திலே ஆழ ஆழ நாம் இளங்குழவியாக மாறி, அனுபவத்தில் மூழ்கி, ஊமையாகி, கண்ணீர் வார்ந்து மயிர் சிலிர்த்துப் பேரின்பப் பிழம்பாக நிற்கிறோம். உண்மைக் கவியைத் துய்த்துணரும் வழி ஈதே என்பதை இத்திருவிளையாடல் தெளிவுறுத்துகின்றது.

அறிவு உலகையும் கடந்து மெய்யான உணர்வு உலகில் புகுதல் வேண்டும். மணிவாசகனார் மெய்யுணர்வு பெற்ற மேலோர், ஆநந்த அனுபவத்தில் மூழ்கியவர், தமிழேயானவர். அவரை அவ்வாறாக்கியவர் மதுரையும் அரசனும் ஆண்டவனுமேயாம். அவர்

எதிரே நரியும் பரியாம், சீவன் சிவன் ஆம், அவர்க்குப் பின்னே பரியும் நரியாம். அருள் வெள்ளம் பொங்கும் அன்பர் ஒளியில் அனைத்தும் ஆண்டவனாய் மாறும். எங்கும் சிதம்பரம் பொங்கி வழிகின்ற உண்மை, பிரம்பால் அடித்ததுபோல் அங்கு அனைவர்க்கும் விளங்கும்.

தனி உயிருக்கு ஒரு சிறப்பு உண்டெனினும், அது உயர்ந்து உய்வது உயிர்களிடையேயாம். சேர்ந்து வாழ்வதிலேயே அதன் அன்பு சிறக்கின்றது, விரிகின்றது. இந்திரன் முதலியோரும் இன்பம் துய்ப்பது வானுலகிலானாலும், இங்கு நேர்ந்த காலத்தில் தொண்டு புரிய இவ்வுலகிற்கே வரவேண்டி யிருக்கிறது. " புவனியிற் போய்ப் பிறவாமையில் நாள் நாம் போக்குகின்றோம் அவமே...' என்று நோக்கி......திருமாலாம் அவன் விருப்பெய்தவும் மலரவன் ஆசைப்படவும்......" என்பது திருவாசகம். இம்மண்ணுலகையே சிவலோகமாகக் கண்டவன் வரகுணபாண்டியன். " ஓடும் பல்நரி ஊளைகேட்டரனைப், பாடின என்று படாம்பல அளித்தும், குவளைப் புனலில் தவளை அரற்ற, ஈசன் தன்னை ஏத்தின என்று, காசும் பொன்னும் கலந்து தூவியும்,......காம்பவிழ்த் துதிர்ந்த கனி உருக் கண்டு, வேம்புகட்கெல்லாம் விதானம் அமைத்தும்,......பரிவுடன் கொடுத்த, பெரிய அன்பின் வரகுணதேவன்," என்று பட்டினத்துப் பிள்ளையார் புகழ்வது, அனைத்தையும் சிவமாகக் காணும் அவனுடைய பெருமையாலேயாம். " மாதர்ப்பிறைக் கண்ணியானை மலையான் மகளொடும்பாடி......காதல்மடப்பிடியோடும் களிறுவருவன கண்டேன் " என்பதன்றோ அப்பர் பெருமான் திருவையாற்றிற் கண்ட கைலைக் காட்சி. ஆணையும் பெண்ணையும் அப்பனும் அம்மையுமாகக் காணுதலன்றோ சைவர்கள் காண விரும்பும் கைலைக் காட்சி.

மக்கள் ஒன்றுசேர்ந்து வாழும்போது ஒவ்வொருவரும் தத்தம் கடமையைச் செய்தல்வேண்டும். அல்லாக்கால் மக்கட் கூட்டம் வாழமுடியாது. கடமை தவறினால் கடவுளும் கட்டுக்கு அடங்குதல் வேண்டும். வையையில் உடைப்பு. கரையை அடைக்கக் கிழவியும் ஒத்துழைக்கிறாள், ஆளை அனுப்புகிறாள். வேலை செய்

யாத ஆளை அரசன் அடிக்கிறான். ஆண்டவனாகிய ஆள் அடியை ஏற்றுக் கட்டுப்பாட்டுக்குட்படுகின்றான். சைவ சித்தாந்த முத்தி நிலையிலும் சமத்துவம் கொழுந்துவிட்டெரிகிறது.

இவ்வாறு பல பல உண்மைகள் இம்மதுரை மாநகரத்தைப் பற்றி எழுந்த கதைகள் வழியே வளர்ந்து ஓங்கி வந்தன. பாரில் எங்கும் பட்டினியில்லாதபடி பாடுபடுவது பைந்தமிழ் வாழ்க்கை. சிறுமைப் படுத்தும் வறுமையை நீக்குவதே சிவப்பெரு வாழ்க்கை. ஆடல் நெறியும் பாடல் நெறியும் அருந்தமிழ் வாழ்வு. தமிழிசையிற் களிப்பதே தனிச் சிவவாழ்வு. உயிர்த்தொண்டென்பதே சிவத் தொண்டாகும். பெண்ணின் பெருமையே பெருந்தமிழ்ப் பேறு. தண்ணருள் பெறுவதே தகுசிவப்பேறு. பெண்வாழப் பிறந்தது நாம் பேசும் தமிழ்மொழி. பெண்ணொடு திகழ்வது நாம் பேணும் சிவப்பொருள். சைவமும் தமிழும் வளரவேண்டுமானால் இத்தகைய கருத்துக்கள் நம் வாழ்க்கையாகவே வெளியாதல் வேண்டும். தமிழும் சைவமும் நூல்களல்ல. உயரிய வாழ்க்கையின் உண்மை வடிவங்களேயாம். வாழ்க்கைத் துணைவியராயிருக்கும் மாதரே இத்தமிழ் வாழ்க்கையாம் சிவ வாழ்க்கையை உலகில் வாழ்ந்து காட்டி உலகை உய்விக்கவேண்டும்.

Editor : M. Balasubrahmanya Mudaliar, B. A., B. L.

Printed at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah by T. V. Volaganathan (Publisher) for the Saiva Siddhanta Maha Samajam, at 51, Thengur Chelvavinayagar Koil Street, Mylapore, Madras.